மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இரண்டு நாள் சுற்றுப்பயணமாக திருச்சி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களுக்குச் சென்று இருந்தார். 9.10.2025 அன்று கலந்துகொண்ட அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளின் புகைப்படத் தொகுப்பு.

● திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் அரசு மருத்துவமனையில் ரூ.5 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள விபத்து மற்றும் அவசர சேவைக்கான கட்டடத்தைத் திறந்து வைத்து, புதிய கட்டடத்தில் உள்ள வசதிகளை ஆய்வு செய்தார்.

● திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூரில் நடைபெற்ற அரசு விழாவில், 5,478 பயனாளிகளுக்கு 61.45 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி, முடிவுற்ற திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தார்.

● திருச்சி வடக்கு மாவட்டம், துறையூர் தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட – ஒன்றிய – நகர – பேரூர் – கிளை – வார்டு செயலாளர்கள் மற்றும் பாக முகவர்களுடன் கலந்துரையாடினார்.